**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – 2009–10 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சித் திட்டங்கள் – நிதி ஒப்புதலளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந2)த் துறை.**

அரசு ஆணை (நிலை) எண். 89 நாள். 29.9. 2009.

திருவள்ளுவர் ஆண்டு, 2040
புரட்டாசி

படிக்கப்பட்டது

1.அரசு ஆணை (நிலை) எண். 89, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 11.8.2008 .
2.பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். சி1/2217/09, நாள் 9.9.2009.

* * * *

**ஆணை**:

மேலே வரிசை எண்.1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், 2008–09 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய, படித்து வேலைவாய்ப்பற்று இருக்கும் 5775 நபர்களுக்கு அரசு மூலம் 100% மானியத்தில் ரூ.468.65 இலட்சம் செலவினத்தில் வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சிகளை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை மூலம் அளித்திட அரசு ஆணையிட்டது.

2. மேலே வரிசை எண்.2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் மூலம் 2009–10 –ஆம் ஆண்டிற்கு வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சியை அளிப்பதற்கு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். அதில், மிகப்பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் 24 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளதாகவும், இப்பயிற்சியின் மூலம் 4648 நபர்கள் பயனடைவார்கள் என்றும், இப்பயிற்சிக்கென நடப்பு நிதியாண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் திட்டம்சாரா கணக்குத் தலைப்பில் ரூ.503.68 இலட்சமும் விளம்பரச் செலவினமாக ரூபாய் 15.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய்.518.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையரின் செயற்குறிப்பு அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. 2009–10 ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 4648 நபர்களுக்கு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை மூலம் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 24 வகையிலான வேலை வாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சித் திட்டங்களை நடத்திட, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மூலம்

செயல்படுத்த ரூ. 518.62 இலட்சம் (ரூபாய் ஐந்து கோடியே பதினெட்டு இலட்சத்து அறுபத்து இரண்டு ஆயிரம் மட்டும்) செலவில் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

<u>திட்டம் சாராதது (Non-Plan Head) நிதி ஒதுக்கீடு: ரூ.503.62 இலட்சம்</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – .பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் I திட்டத்தில் சேராதது – BL – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினருக்கு வேலை நோக்கிலமைந்த பயிற்சி வகுப்புகள் – 72 பயிற்சி."
(த.தொ.கு. .2225 – 03 –277– BL -7203)

<u>விளம்பர செலவினம் : ரூ.15.00 இலட்சம்</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் பதினொன்றாம் திட்டப் பணிகள் – I திட்டத்தில் சேராதது – BA – தலைமையிடப் பணியாளர் – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் நல இயக்ககம் – 08 விளம்பரமும் பிரச்சாரமும் – 01. விளம்பர கட்டணங்கள்."
(த.தொ.கு. 2225 – 03 –001– BA -0812)

5. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்களை கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயற்படுத்தப்படவேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:-

I) 24 வகையான வேலைவாய்ப்பு பயிற்சிகளுக்கும் 3:2 என்ற விகிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும்.

II) அவ்வாறு தேர்வு செய்யப்படும் நிலையில் ஏதேனும் ஒரு இனத்தில் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு) நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையில் பயனாளிகள் இருக்கும்போது, அடுத்த இனத்திலிருந்து தகுதியுள்ள பயனாளிகளைக் கொண்டு நிரப்பிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

III) சிறுபான்மையினருக்கென தனியாக வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வேலைவாய்ப்பு பயிற்சிகளிலும், சிறுபான்மையினத்தவர்களைத் தவிர்த்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பயனடையும் வகையில் ஆணை வெளியிடப்படுகிறது.

IV) பயிற்சிகளுக்கு பயனாளிகளை தேர்வு செய்யும்போது விதவை, ஆதரவற்ற மகளிர் போன்றவர்களுக்கு அதிக பட்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் வரை தளர்த்திக் கொள்ள

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

V) பயிற்சிக் கட்டணம் குறையும் நிலையில், சரணடைப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, பயிற்சி கட்டணத்தில் ஏற்படும் சேமிப்பில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை மொத்த நிதி ஒதுக்கீட்டிறக்குள் உயர்த்திக் கொள்ள இரு ஆணையர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

VI) பயிற்சிகளை நடத்துவதற்காக ஒப்பளிக்கப்பட்ட மையங்களில் / மாவட்டங்களில் பயிற்சி அளிப்பதற்கு பயிற்சி நிறுவனம் எதுவும் முன்வராத நிலையில் அந்த மையத்திற்கு / மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை, தேவையுள்ள இதர மையங்களுக்கு / மாவட்டங்களுக்கு மாற்றிக்கொள்ள ஆணையர்களுக்கு அதிகாரம் வழங்கலாம். அதேபோன்று ஒரு குறிப்பிட்ட பயிற்சிக்கு தேவையான நபர்கள் வரவில்லையென்றால், அந்த இடங்களை தேவையுள்ள வேறொரு பயிற்சிக்கு மொத்த நிதி ஒதுக்கீட்டிற்குட்பட்டு மாற்றி வழங்கவும் ஆணையர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

VII) கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு மட்டும், அப்பயிற்சிக்காக குறிப்பிடப்பட்ட தகுதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி பயிற்சி பெற விரும்புவர்களிடமிருந்து பொது விளம்பரம் மூலம் நேரடியாக விண்ணப்பங்களைப் பெற்று மாவட்ட வாரியாக வயது முதுநிலை அடிப்படையில் சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம் பயிற்சியளிக்க ஆணை வழங்கப்படுகிறது.

VIII) கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை தவிர பிற பயிற்சிகளுக்கு உயரளவு வயது வரம்பு 32 என்று நிர்ணயம் செய்யப்டுகிறது.

IX) இப்பயிற்சிகளிலிருந்து தேவையற்ற காரணங்களுக்கான இடையில் விலகும் பயிற்சியாளர்களிடமிருந்து மொத்த பயிற்சி கட்டணத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை வசூல் செய்து அரசு கணக்கில் செலுத்தவும், தவிர்க்க இயலாத காரணங்களினால் பயிற்சிகளிலிருந்து விலகும் பயிற்சியாளர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

X) இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகளை அந்தந்த பயிற்சிக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாநில / மத்திய அரசு பயிற்சி நிறுவனங்கள் மூலமாக நேரடியாக பயிற்சியளிக்கவும், இதர பயிற்சிகளுக்கு தனியார் பயிற்சி நிலையங்களை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் அதற்கு 2000 ஆம் ஆண்டில் வனையப்பட்ட விதிகளின் அடிப்படையில் தேர்வு செய்து பயிற்சிகளை நடத்திடவும் ஆணை வெளியிடப்படுகிறது.

XI) மேற்படி பயிற்சிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை சென்ற ஆண்டுபோல் (விளம்பரத்திற்கான செலவினம் தவிர்த்து) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தன் வைப்பு நிதிக் கணக்கிற்கு மாற்றி அவ்வப்போது பயிற்சி நிலையங்களுக்கு தொகையினை வழங்க இருதுறை ஆணையர்களுக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. இந்த வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சி முடிந்த பின், இப்பயிற்சி பெற்றவர்களில் எத்தனை நபர்களுக்கு வேலை கிடைத்துள்ளது, எத்தனை நபர்கள் சொந்தமாக தொழில் / வேலையில் ஈடுபட்டுள்ளார்கள் போன்ற விவரங்களை தொகுத்து, ஆய்வு செய்து பயிற்சி முடிந்த ஒரு மாதத்திற்குள் அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண். 136/DS(TM)/09, நாள். **29.9.2009–இன்** இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**து. நா. இராமநாதன்,**
**அரசு செயலாளர்.**

<u>பெறுநர்</u>
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை–18 / (பெயரில்)
மாநிலக் கணக்காயர்,(துணிக்ககை –I), சென்னை–18 / (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை –6 / (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5.
**<u>நகல்:</u>**
நிதி (பி, மி.பி)த் துறை, சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(பிந.III)த் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**அரசு சார்புச் செயலாளர்.**

| இணைப்பு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை** | | | | | | | |
| **2009–10ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சிகளின் பட்டியல்** | | | | | | | |
| வ.எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் காலம் | கல்வித் தகுதி | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | பயிற்சிக் கட்டணம் (ரூ.) | நிதி ஒதுக்கீடு (ரூ. ஆயிரத்தில்) |
| 1 | **Apparel Manufacturing Technology** | *Apparel Training and Design Centre, Guindy, Chennai-32* **(Sponosored by Apparel Exports Promotion Council, Ministry of Textiles, Government of India)** | 12 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **80** | 22500 | **1800.00** |
| 2 | **Computer Application in Knitwear Industry** | *National Institute of Fashion Technology)* **Under the control of Ministry of Textiles, Government of India.** | 6 months | 10ம் வகுப்பு / 12ம் வகுப்பு மற்றும் ஆடை வடிவமைப்பு துறையில் ஒரு வருட அனுபவம் | **30** | 50000 | **1500.00** |
| 3 | **Certificate course in Implementing and Maintaining Network & Security Infrastructre using Windows 2003 Server** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **200** | 7000 | **1400.00** |
| 4 | **Certificate course in Web Authoring** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **200** | 7000 | **1400.00** |
| 5 | **Advanced Diploma in 3D Animation** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 12 மாதங்கள் | 12th Pass | **200** | 24000 | **4800.00** |
| 6 | **Certificate course in J2EE** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 3 மாதங்கள் | 12th Pass | **200** | 7550 | **1510.00** |
| 7 | **Honours Diploma in Computer Application** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | **6 months** | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | **300** | **20000** | **6000.00** |
| 8 | **Certificate course in computer Hardware Maintenance** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 3 மாதங்கள் | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | **278** | 6500 | **1800.00** |
| 9 | **Computer accountant** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | **6 months** | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | **400** | **7500** | **3000.00** |
| 10 | **Certificate course Mass Communication and Journlism** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 மாதங்கள் | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | **200** | 5000 | **1000.00** |
| 11 | **Certificate course in Advertisting** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 மாதங்கள் | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | **200** | 5000 | **1000.00** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | **Certificate course in Communicative English** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 3 months | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | **500** | 4000 | **2000.00** |
| 13 | **Editing, Non Linear Editing and Film Editing** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 12 மாதங்கள் | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | **50** | 50000 | **2500.00** |
| 14 | **Certificate course in Digital Visual Communication** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **100** | 8500 | **850.00** |
| 15 | **Certifcate course in Digital printing and Publication** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 3 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **100** | 5000 | **500.00** |
| 16 | **Certificate course in Mobile Phone Servicing** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 3 months | 12ம் வகுப்பு தேர்ச்சி | **100** | 4000 | **400.00** |
| 17 | **Certificate course in Beauty Theraphy** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 4 months | 10ம் வகுப்பு தேர்ச்சி | **200** | 5000 | **1000.00** |
| 18 | **Certificate course in Hotel Management and Cateriing Science** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 12 மாதங்கள் | 10ம் வகுப்பு தேர்ச்சி | **400** | 19000 | **7600.00** |
| 19 | **Certifcate course in Clinical Nursing Assistant** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 12 மாதங்கள் | 10ம் வகுப்பு தேர்ச்சி | **200** | 10000 | **2000.00** |
| 20 | **Certificate course in Radiological Assistant ( X-ray Assistant)** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | **6 months** | 10ம் வகுப்பு | **200** | **10000** | **2000.00** |
| 21 | **Certificate course in Medical Transcription** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 6 மாதங்கள் | 12th pass (with Science Group) | **200** | 9000 | **1800.00** |
| 22 | **Jewellary Manufacutring** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | 2 மாதங்கள் | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | **40** | 5050 | **202.00** |
| 23 | ***Business Management in Jewellary*** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | **4months** | 10ம் வகுப்பு | **30** | **10000** | **300.00** |
| 24 | **Diploma in logistics and Port Management** | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 (Tamil Nadu Transperancy Tender Acts 1998 and its Rules 2000) | **6 months** | Any degree | **200** | **20000** | **4000.00** |
| | **TOTAL** | | | | **4608** | | **50362.00** |

துு.நா.இராமநாதன்
அரசு செயலாளர்

//உண்மைநகல்//

பிரிவு அலுவலர்